# இயற்கை வள முகாமைத்துவத்திற்கான சமூக மட்ட ஆளுகை: பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்கான ஓர் ஆய்வு

**பகீரதி, ஆ., சுதாகர், க.**
புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
bakeerathibakee@gmail.com

*இயற்கை வளம் என்பது ஒரு நாட்டினுடைய சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் வளர்ச்சியில் முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது. இன்று உலகில் இயற்கை வளங்கள் துரிதமாக அழிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு முக்கிய காரணமாக இயற்கை வள முகாமைத்துவத்துவ ஆளுகையின் பலவீனங்கள் அமைகின்றன. இயற்கை வளங்களில் நல்ல ஆளுகை மற்றும் மோசமான ஆளுகை என்பன காணப்படுகின்றன. இலங்கையில் அதிகமாக மோசமான ஆளுகை காணப்படுகின்றது. கிளிநொச்சியில் 30 வருடகால யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி செயற்பாடுகள் மோசமான ஆளுகையில் தாக்கம் செலுத்துகின்றன. பூநகரி பிரதேச செயலகர் பிரிவிற்குட்பட்ட இயற்கை வள முகாமைத்துவத்தில் சமூக அமைப்புக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் என்பன ஒன்று சேர்ந்த அமைப்புக்களின் மேலாண்மை சமூக மட்டத்தில் முக்கியமாகக் காணப்படுகின்றது. பூநகரி பிரதேசத்தில் இயற்கை வள முகாமைத்துவத்துடன் சம்பந்தப்பட்டுள்ள நிறுவனங்களையும், சட்டங்களையும், விதிகளையும் பட்டியல்படுத்துதல், இப்பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்கள், அவற்றின் பரம்பல், பயன்பாடு மற்றும் ஆளுகையை மதிப்பிடுதல், நல்ல ஆளுகை பண்புடன் இப்பிரதேசத்தில் நடைமுறையில் உள்ள ஆளுகை பண்புகளை மதிப்பிடுதல், மற்றும் இயற்கை வளங்களை பேண்தகு முறையில் முகாமைத்துவம் செய்வதற்கான சமூக மட்ட ஆளுகையை உருவாக்குதல் போன்றன ஆய்வின் நோக்கங்களாக காணப்படுகின்றன. ஆய்வுக்கான முதலாம் நிலை தரவுசேகரிப்பு நேர்காணல் மூலம் இயற்கை வளங்களுடன் தொடர்புபட்ட நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டது. இலக்கு குழு கலந்துரையாடல் ஆய்வு பிரதேசத்தில் மொத்தமாக 40 நபர்களை கொண்டு கௌதாரிமுனை, மண்ணித்தலை, முட்கொம்பன், கிராஞ்சி, வேரவில் மற்றும் ஜெயபுரம் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலை தரவுகளாக நிலப் பயன்பாட்டு படம், குளங்கள் தொடர்பான தரவுகள், மண்ணகழ்வு தொடர்பான தரவுகள், மரம் வெட்டுதல் தொடர்பான சுற்றறிக்கைகள், மணலகழ்வு தொடர்பான சுற்றறிக்கைகள், சட்டங்கள், போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. நிலப்பயன்பாட்டு படம் (2020)* GIS *இல் பகுப்பாய்வு செய்யப்பட்டு இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற இயற்கை வளங்களின் இடம் சார் பரம்பல் காட்டப்பட்டுள்ளது. இயற்கை வளங்களுக்கான நல்ல ஆளுகைப் பண்புகளுடன் ஆய்வு பிரதேசத்தில் இயற்கை வள முகாமைத்துவத்திற்கான நடைமுறையில் உள்ள ஆளுகை ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இலக்குக் குழு கலந்துரையாடல் மற்றும் நேர்காணல் என்பன கருப்பொருள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பூநகரி பிரதேசத்தில் இயற்கை வள முகாமைத்துவத்தில் இலஞ்சம் அதிகம் காணப்படுவதோடு சட்ட ஆட்சியில் பலவீனம் காணப்படுகின்றது. அரசியல் தலையீடுகள் அதிகம் காணப்படுவதோடு, மக்களை*